# <u>குழித்துறை நகராட்சி</u>

## <u>குழித்துறை நகர்மன்றத்தின் 05-06-2020 வெள்ளிக்கிழமை நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்</u>

**<u>பொருள் எண் .1</u>**

தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் 2020-2021-ன்கீழ் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட தார்சாலைகளை சீரமைக்க ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், ஒதுக்கீட்டு தொகைக்கு மதிப்பீடு தயார் செய்து விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்கவும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 3-6-2020-ம் நாளைய தொலைபேசி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட திட்டத்தின் கீழ் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் தார்சாலைகளை சீரமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9, 18, 12, 17, 10 - மடிச்சல் சாலை (விளவங்கோடு பள்ளிக்கூடம் முதல் நகராட்சி எல்கை வரை) எம்.எஸ். ரோடு (கிராம நிர்வாக அலுவலகம் முதல் தேசிய நெடுஞ்சாலை கிட்டங்கி வரை), கண்ணக்கோடு சாலை, கொடுங்குளம் சாலை (திறந்தவெளி கிணறு முதல் வீ.எண்.31/19 வரை), விளவங்கோடு சாலை ( மடிச்சல் ரோடு சந்திப்பு முதல் மோசஸ் பவன் வரை) உள்ள தார் சாலைகளை மேம்படுத்துதல் | 100.00 |

இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கையை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3531**
**அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண். 2**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு மறு ஏலம் மறு ஒப்பந்தப்புள்ளி 28-05-2020-ல் கோரியதில் பி.பி.முனிசாமி வணிகவளாகம் கடை F8-க்கு இரண்டு நபர்கள் ஒப்பநதப்புள்ளி கொடுத்துள்ளார்கள். அதன் விபரம் கீழ்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | வி.ச. ஆரியா,<br>செறுவிளாகத்துவீடு,<br>மடிச்சல் அஞ்சல், குழித்துறை | F8-கடைக்கு மாத வாடகை ரூ.5000/- |
| 2 | T. விஜயகுமார்,<br>செறுவிளாகத்துவீடு,<br>மடிச்சல் அஞ்சல், குழித்துறை | F8-கடைக்கு மாத வாடகை ரூ.6000/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளிலும் வரிசை எண்.2-ல் T. விஜயகுமார் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையினை அதிகமாக இருப்பதால் ஆணையரின் பார்வைக்கும் முடிவிற்கும்.

அ.கு.:- மேற்படி கடை கடந்த மூன்று வருடங்களாக காலியாக இருப்பதால் மேலும் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படாத வண்ணம் தற்போது கேட்டுள்ள மாதவாடகை ரூ.6000/-த்திற்கு ஏற்று அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3532**
**அனுமதிக்கலாம்.**

# குழித்துறை நகர்மன்றத்தின் 24-06-2020 புதன்கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

**பொருள் எண். 1**

குழித்துறை நகராட்சி ஆணையாளருக்கு குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு Structural Design Elevation பெறுவதற்கு Consultant நியமனம் செய்வதற்கு 12-03-2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு.R. அன்புராஜா, கோயம்புத்தூர் | 25000 |
| 2 | திரு.S. கதிர்வேல், கோயம்புத்தூர் | 29500 |
| 3 | BSK Constructions,Coimbatore. | 32000 |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் திரு.R. அன்புராஜா என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த விலைப்புள்ளி தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3533**
**அனுமதிக்கலாம்.**

**பொருள் எண். 2**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளுக்கும் குடிநீர் வினியோகம் செய்வதற்கு தலைமை நீரேற்று நிலைய சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள 7 எண்ணம் மின் மோட்டார்கள், சப்பாத்து நீரேற்று நிலையத்திலுள்ள 15 H.P. Submersible Motor, இடைக்குளம் நீரேற்று நிலையத்தில் 15 H.P. Submersible Motor, 21 வார்டுகளிலும் குடிநீர் பயன்பாட்டிற்கு இல்லாத இதர உபயோகத்திற்கு அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள 1.00HP, 1½ H.P., 2 H.P. Compressor மோட்டார்கள், 1 H.P., 1½ H.P Jet Motors ஆகியவற்றில் பழுது ஏற்படும் காலங்களில் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், நகராட்சியில் போதிய மின்பணியாளர்கள் இல்லாத காரணத்தால் குடிநீர் பணியின் அவசியம்

கருதி குடிநீர் தடையின்றி வழங்குவதற்கு மேற்கண்ட மோட்டார்கள் பராமரிப்பு செய்வதற்கு ரூ.9,90,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3534**

**அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் எண். 3**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலைய A பிரிவு A11 கடை மற்றும் B பிரிவு B4 கடைகளை குத்தகைக்கு எடுத்து கடையினை தற்போது தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தினால் கடையின் சாவியினை 31-03-2020-ல் ஒப்படைக்கப்பட்டது. அவர்களுக்கு 01-04-2019 முதல் 31-03-2020 வரையுள்ள வாடகையினை அவர்களது வைப்புத் தொகையில் ஈடு செய்த மீதிதொகையினை திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

1) A11- கடை C. இரவிசிங்

| | |
|---|---|
| Deposit | Rs. 2,55,000 |
| Additional Deposit | Rs. 1,24,800 |
| | 3,79,800 |

2019-2020-ல் ஈடு செய்யப்பட வேண்டிய தொகை மற்றும் சேவைவரி தொகை

| | |
|---|---|
| மாத வாடகை ரூ.11960 x 12 = | 1,43,520 |
| சேவைவரி ரூ.18% | 25,833 |
| | 1,69,353 |

= 379800 - 169353 = 210447 அன்னாருக்கு திருப்பி வழங்கலாம்.

2) B4- கடை M. சுதா

| | |
|---|---|
| Deposit | Rs. 1,00,000 |
| Additional Deposit | Rs. 1,26,600 |
| | 2,26,600 |

அக்டோபர் 2019 முதல் மார்ச் 2020 வரை

| | | |
|---|---|---|
| மாத வாடகை ரூ.10550 x 6 | = | 63,300 |
| சேவைவரி ரூ. 18% | | 11,394 |
| | | 74,694 |

= 226600 - 74694 = 151906 திருப்பி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3535**
**அனுமதிக்கலாம்.**

**<u>பொருள் எண். 4</u>**

குழித்துறை நகராட்சியின் பம்மம் உரக்கிடங்கில் குப்பைகள் குவிந்து பொதுமக்களுக்கு இடையூறு அளிக்கும் வகையில் குவிந்து தூர்நாற்றம் வீசப்படுகிறது. ஆகவே பொது மக்களின் நலன் கருதியும், கொரோனா நோய் தொற்று அதிகமாக நகரில் பரவகூடிய சூழ்நிலை இருப்பதால் உடனே மேற்படி குப்பைகளை JCB இயந்திரம் மூலம் அகற்றிட ஆணையர் அவர்களின் 3-6-2020-ம் தேதிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதனடிப்படையில் அவசர அவசியம் கருதி குப்பைகளை மாற்றிட உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3536**
**அனுமதிக்கலாம்.**

## குழித்துறை நகர்மன்றத்தின் 30-06-2020 செவ்வாய்கிழமை நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

**பொருள் எண். 1**

குழித்துறை நகராட்சி பராமரிப்பில் உள்ள பேருந்து நிலைய நுழைவு கட்டணம் மற்றும் இருசக்கர வாகனத்திற்கு 18/19 மற்றும் 19/20-ல் பலமுறை ஏலம் விடப்பட்டும் எவரும் ஏலம் கோராத காரணத்தினால் துறை மூலம் வசூல் செய்யப்பட்டுள்ளது. அதற்காக பேருந்து நியை நுழைவு கட்டண ரசீது அச்சிட்ட வகையில் மற்றும் இருசக்கர வாகனம், ஏலப்பதிவேடு ஒப்பந்தப்புள்ளி பதிவேடு ஆகியவைகள் தக்கலை கூட்டுறவு நிறுவனம் மூலம் வாங்கியமைக்கு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றது. தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

1) மார்த்தாண்டம் பேருந்து நிலைய நுழைவு கட்டண ரசீது ரூ.12/- ரசீது 500 Book

| | | | |
|---|---|---|---|
| 500 Book | | Rs.19186 | |
| GST | 18% | Rs. 1727 | |
| CST | | Rs. 1727 | |
| Total | : | Rs.22640 | 22640 |

2) இருசக்கர வாகன கட்டண ரசீது Rs.8/- 50 Book

| | | | |
|---|---|---|---|
| 50 Book | | Rs. 2128 | |
| GST | 18% | Rs. 192 | |
| CST | | Rs. 192 | |
| Total | : | Rs. 2512 | 2512 |

3) ஏலபதிவேடு மற்றும் ஒப்பந்தப்புள்ளி

| | | | | |
|---|---|---|---|---|
| பதிவேடு | 10 Book | | Rs.4475 | |
| | GST | 18% | Rs. 403 | |
| | CST | | Rs. 403 | |
| | Total : | | Rs.5281 | 5281 |

4) மார்த்தாண்டம் பேருந்து நிலைய நுழைவு கட்டண ரசீது

| | | | | |
|---|---|---|---|---|
| | 300 Book | | Rs.11122 | |
| | GST | 18% | Rs. 1001 | |
| | CST | | Rs. 1001 | |
| | Total : | | Rs.13124 | 13124 |

ஆகமொத்தம் : 43557

**நகர்மன்ற தீர்மான எண் : 3537**
**அனுமதிக்கலாம்**

**பொருள் எண். 2**

குழித்துறை நகராட்சியில் குடிநீர் குழாய் பதிக்க தேவைப்படும் உபகரணங்களுக்கு 2020-2021 ஆண்டிற்கான Schedule of rate PWD, TWAD மூலமும் Schedule of rate-ல் குறிப்பிடப்படாத இனங்களுக்கு உள்ளூர் விலைப்புள்ளி நேரடியாக மூன்று பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளி படி கீழ்கண்டபடி மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| DOMESTIC | | | | | |
|---|---|---|---|---|---|
| Sl. No. | LENGTH | ROAD RESTORATION | DEPOSIT | SUPERVISING CHARGE | TOAL AMOUNT |
| GRAVEL ROAD | | | | | |
| 1 | 0-15 m | 1687 | 3000 | 2469 | 7156 |
| 2 | 16-30 m | 2901 | 3000 | 3618 | 9519 |
| 3 | 31-45 m | 4114 | 3000 | 5077 | 12191 |
| 4 | 46-75 m | 6541 | 3000 | 7653 | 17194 |
| 5 | 76-90 m | 7755 | 3000 | 8933 | 19688 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| B.T. ROAD | | | | | |
| 1 | 0-15 m | 7542 | 3000 | 3766 | 14308 |
| 2 | 16-30 m | 14641 | 3000 | 6218 | 23859 |
| 3 | 31-45 m | 21694 | 3000 | 9054 | 33748 |
| 4 | 46-75 m | 35780 | 3000 | 14133 | 52913 |
| 5 | 76-90 m | 42913 | 3000 | 16720 | 62633 |
| C.C. ROAD | | | | | |
| 1 | 0-15 m | 7794 | 3000 | 3866 | 14660 |
| 2 | 16-30 m | 15146 | 3000 | 6420 | 24566 |
| 3 | 31-45 m | 22450 | 3000 | 9367 | 34817 |
| 4 | 46-75 m | 37058 | 3000 | 14636 | 54694 |
| 5 | 76-90 m | 44425 | 3000 | 17324 | 64729 |
| NON DOMESTIC | | | | | |
| GRAVEL ROAD | | | | | |
| 1 | 0-15 m | 1687 | 6000 | 2469 | 10156 |
| 2 | 16-30 m | 2901 | 6000 | 3618 | 12519 |
| 3 | 31-45 m | 4114 | 6000 | 5077 | 15191 |
| 4 | 46-75 m | 6541 | 6000 | 7653 | 20194 |
| 5 | 76-90 m | 7755 | 6000 | 8933 | 22688 |
| B.T. ROAD | | | | | |
| 1 | 0-15 m | 7542 | 6000 | 3766 | 17308 |
| 2 | 16-30 m | 14641 | 6000 | 6218 | 26859 |
| 3 | 31-45 m | 21694 | 6000 | 9054 | 36748 |
| 4 | 46-75 m | 35780 | 6000 | 14133 | 55913 |
| 5 | 76-90 m | 42913 | 6000 | 16720 | 65633 |
| C.C. ROAD | | | | | |
| 1 | 0-15 m | 7794 | 6000 | 3866 | 17660 |
| 2 | 16-30 m | 15146 | 6000 | 6420 | 27566 |
| 3 | 31-45 m | 22450 | 6000 | 9367 | 37817 |
| 4 | 46-75 m | 37058 | 6000 | 14636 | 57694 |
| 5 | 76-90 m | 44425 | 6000 | 17324 | 67749 |

மேலும் குடிநீர் இணைப்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்திட 2020-2021-ம் ஆண்டிற்கு சிமெண்ட் தளம், தார் தளம் மற்றும் மண் தரைக்கு ரூ.850/- வீதம் வசூல் செய்யவும் குடிநீர் குழாய் இணைப்பு துண்டிப்பு மற்றும் மறு இணைப்பு கட்டணம் ரூ.500/- வீதம் வசூல் செய்திடவும், மேற்கண்டவிலை விகிதப்படி 2020-2021 ஆண்டிற்கு மதிப்பீடு தயார் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3538**
**அனுமதிக்கலாம்**

**பொருள் எண். 3**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 12-06-2020-ல் மறுஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள A.வரிசையில் A1.கடையில் இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். அதன் விபரம் கீழ்வருமாறு.

1) மார்த்தாண்டம் பேருந்து நிலைய A1 கடை

| | மாத வாடகை ரூபாய் |
|---|---|
| 1) சேக் திலகராஜ்,<br>த/பெ. தங்கராஜ்,<br>மணியச்சன்விளை,<br>மார்க்கெட் ரோடு. | 6000/- |
| 2) J. சுசீலா,<br>க/பெ. சுந்தர் ராஜ்,<br>அடப்புவிளை,<br>திருவிதாங்கோடு. | 6500/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நபர் திருமதி. J. சுசீலா என்பவரின் ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்கவும், மேலும் மேற்படி கடை இரண்டு வருடங்களாக காலியாக இருப்பதால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வண்ணம் தற்போது வரப்பெற்ற

ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3539**
**அனுமதிக்கலாம்**

**<u>பொருள் எண். 4</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலைய சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள மின் இணைப்பு எண்.KDM-1 பழுதடைந்துள்ளதால் அதனை மாற்றி புதிய மின்மீட்டர் பொருத்துவதற்கு ரூ.6656/- மின்வாரியத்திற்கு செலுத்த மின்வாரிய கடிதம் AE/JE/O&M/F.APP.Tracking D.No.404/2020, நாள் 15-06-2020-ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை குடிநீர் நிதியில் செலவிட மன்றத்தின் அனுமதிக்கு.
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3540**
**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் உரக்கிடங்கில் BIO Mining வேலை நடைபெறுவதால் நகரில் தினசரி சேகரமாகும் குப்பைகளை கொட்ட போதிய இடவசதி இல்லாததால் Hitachi இயந்திரம் மூலம் குப்பைகளை அகற்றிட 21-01-2020-ல் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | Hitachi இயந்திரம் மணிகூர் 1-க்கு தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு..D. ஜஸ்டின்குமார் | 1200/- |
| 2 | திரு.D. ராஜேஷ்குமார் | 1250/- |
| 3 | திரு.J. சாமுவேல் ஜோஸ்ராஜ் | 1300/- |

அ.கு.:- வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.D. ஜஸ்டின்குமார் என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்று பொது சுகாதார அவசர அவசியம் கருத்தில் கொண்டு வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3541**
**அனுமதிக்கலாம்**

**<u>பொருள் எண். 6</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் அனைத்தும் 26-06-2020-ல் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்றய தினம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மார்த்தாண்டம் கருங்கல் சாலை கடை எண்.44-க்கு இருநபர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள். அதன் விபரம் கீழ்வருமாறு.

1) A. செய்து அலி
1/117 A, புதுத்தெரு — மாதவாடகை — ரூ.4500/-

2) A. சித்திக்,
வலியவிளை — மாதவாடகை — ரூ.5000/-

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் நிலை எண்.2-ல் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள A. சித்திக் என்பவரின் உச்சத்தொகையினை ஏற்று உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.</u>:- மேற்படி கடை இதுநாள் வரையிலும் குத்தகைக்கு போகாமல் புதிதாக குத்தகைக்கு விடப்படுவதால் பக்கத்து கடைக்குண்டான மாத வாடகைக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாத வண்ணம்

உரிமம் வழங்கவும், மீதமுள்ள குத்தகை இனங்களுக்கு மறுஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3542**
**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 7</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதார பிரிவு வாகனம் TN74W-0236-க்கு 2020-ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்ய அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் விலைப்புள்ளி பெற்று மதிப்பீடு ரூ.62045/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தின் பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3543**
**அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள் எண். 8</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலைய A பிரிவு A8 கடை மற்றும் B பிரிவு B5 கடைகளை குத்தகைக்கு எடுத்து கடையினை தற்போது தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தினால் கடையின் சாவியினை 31-03-2020-ல் ஒப்படைக்கப்பட்டது. அவர்களுக்கு நகராட்சியின் காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் கீழ்கண்டவாறு தொகை இருப்பில் உள்ளது. அத்தொகையினை மனுதாரர்களுக்கு திருப்பி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

1) A8- கடை S. முருகன்

Deposit பக்கம் எண்.184 வரிசை எண்.50 Rs. 133320

பக்கம் எண்.178 வரிசை எண்.8 Rs. 50000

வரிசை எண்.9 Rs. 5000

வரிசை எண்.10 Rs. 55570

------------------------

Rs. 243890

----------------------

2) B5- கடை C.S. சுரேந்திரபாபு

Deposit பக்கம் எண்.194 வரிசை எண்.107 Rs. 25000

வரிசை எண்.109 Rs. 129000

வரிசை எண்.112 Rs. 75000

-----------------------

Rs. 229000

----------------------

**நகர்மன்ற தீர்மான எண் : 3544**
**அனுமதிக்கலாம்**

ஒப்பம்/- திரு. எஸ். மூர்த்தி,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.